**<u>சுருக்கம்</u>**

மாற்றுத் திறனாளிகள் நலன் –2010–2011 ம் நிதியாண்டில் கால்கள் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட மின்சாரத்தால் இயங்கும் ஸ்கூட்டர்கள் வழங்கும் திட்டத்திற்கு செலவினம் ஒப்பளிப்பு வழங்கி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந. 2.1)த் துறை

அரசாணை(நிலை) எண்.72 நாள்:06–09–2010

ஆவணி 21, திருவள்ளுவர் ஆண்டு 2041

படிக்க:-

1. அரசாணை நிலை எண் 38 சமுக நலம் மற்றும் சத்துணவு திட்ட (ச.ந. 4)த் துறை நாள் 18.02.2010.
2. அரசாணை நிலை எண் 66 சமுக நலம் மற்றும் சத்துணவு திட்ட (ச.ந. 4)த் துறை நாள் 24.03.2010.
3. அரசாணை நிலை எண் 31 மாற்றுத் திறனாளிகள் நலத் (மா.தி.ந.2) துறை நாள் 28.06.2010.
4. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடித ந.க. எண்.6245/இவாததி–1/2010, நாள் 02.08.2010.

-------

**<u>ஆணை:</u>**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி 2009–2010ஆம் நிதியாண்டில் கால்கள் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறன் படைத்தவர்களுக்கு, இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட மின்சாரத்தால் இயங்கும் ஸ்கூட்டர்கள் வழங்கிட ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிட்டுள்ளது. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையின்படி மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அறிவிப்பிற்கு ஏற்ப 2009–2010ஆம் நிதியாண்டில் மோட்டார் பொருத்தப்பட்ட மூன்று சக்கர வண்டிகள் கோரி விண்ணப்பித்து காத்திருப்போர் பட்டியலில் உள்ள மாணவ / மாணவியர்களுக்கு வழங்கிட ரூ. 120.00 இலட்சம் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளது ஆக மொத்தம் ரூ.170.00 இலட்சம் 2009–2010ஆம் நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கால்கள் பாதிக்கப்பட்ட 761 மாற்றுத் திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட மின்சாரத்தால் இயங்கும் ஸ்கூட்டர்கள் கீழ்கண்டுள்ளவாறு, கொள்முதல் செய்யப்பட்டு செலவினம் மேற்கொள்ளப்பட்டது என்றும், மாவட்ட வாரியான பயனாளிகளின் பட்டியலையும், பயனீட்டுச் சான்றிதழையும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அரசுக்கு அனுப்பியுள்ளார்.

| விவரம் | நிதி ஒதுக்கீடு | வண்டி ஒன்றின் மதிப்பு | கொள்முதல் செய்யப்பட்ட வண்டிகள் எண்ணிக்கை | மொத்த செலவினம் |
|---|---|---|---|---|
| அரசாணை நிலை எண் 38 சமுக நலம் மற்றும் சத்துணவு திட்ட (ச.ந. 4)த் துறை, நாள் 18.02.2010 | ரூ.50.00 இலட்சம் | ரூ.22,308/- | 224 | **ரூ.49,96,959/-** |
| அரசாணை நிலை எண் 66 சமுக நலம் மற்றும் சத்துணவு திட்ட (ச.ந. 4)த் துறை, நாள் 24.03.2010 | ரூ.120.00 இலட்சம் | | 5 37 | **ரூ.1,19,79,316/-** |
| **மொத்தம்** | **ரூ. 170.00 இலட்சம்** | | **761** | **ரூ.1,69,76,275/-** |

2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் தமது கடிதத்தில், 2010–2011ஆம் நிதியாண்டில், மாற்றுத் திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட மின்சாரத்தால் இயங்கும் ஸ்கூட்டர்கள் கல்வி பயிலும் 385 மாணவ மாணவியர்களுக்கும், பணிபுரியும்/ சுயதொழில் புரியும் 1455 மாற்றுத் திறனாளிகளுக்கு ஆக மொத்தம் 1840 மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கிட ஒதுக்கீடு செய்யுமாறு மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் கோரியுள்ளனர் என்றும், மாவட்ட வாரியான பயனாளிகளின் விவரத்தையும் அரசுக்கு அனுப்பியுள்ளார். மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி 2010-2011 ம் நிதியாண்டில் மாநில அரசின் பல்வேறு நலத் திட்ட உதவிகளை மாற்றுத் திறனாளிகள் பெற்றிட நிர்ணயிக்கப்பட்டுள்ள வருமான உச்சவரம்பை முற்றிலும் நீக்குவதால் இத்திட்டத்தின் கீழ் இன்னும் அதிக அளவில் மாற்றுத் திறனாளிகள் விண்ணப்பம் செய்வர் என எதிர்பார்க்கப்படுகிறது என்றும், மேலும் இவ்வரசாணையில் மாற்றுத் திறனாளிகளுக்கான 10 நலத் திட்ட உதவிகளை பெறுவதற்கென நிர்ணயிக்கப்பட்டிருந்த வருமான உச்சவரம்பை முற்றிலும் நீக்கி அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் அதில் ஒரு திட்டமாக “ பேட்டரியால் இயங்கும் எலக்ட்ரிக் ஸ்கூட்டர்” வழங்கும் திட்டமும் ஒரு திட்டமாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் இத்திட்டத்தை செயல்படுத்துவதால் ஏற்படும் கூடுதல் நிதியொதுக்கீடாக ரூ.52,50,000/- அரசால் ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டுள்ளது என்றும், இந்நிலையில், 2010–2011ஆம் நிதியாண்டில், இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட மின்சாரத்தால் இயங்கும் ஸ்கூட்டர்கள் வழங்கிட மொத்தம் ரூ.102.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இத்தொகையின் மூலம் குறைந்த அளவில் மட்டுமே மின்சாரத்தால் இயங்கும் ஸ்கூட்டர்கள் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கிட இயலும் என்றும், இந்தாண்டு (2010–11) மாற்றுத் திறன் படைத்த 385 கல்வி பயிலும் மாணவ /மாணவியர்களுக்கு வழங்கிடவும், பணிபுரியும்/ சுயதொழில் புரியும் 215 மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கிடவும் ஆக குறைந்தபட்சம் 600 மாற்றுத் திறனாளிகளுக்காவது வழங்கிட தேவையான நிதி ஒதுக்கீடு செய்யுமாறு கோரியுள்ளார். மேலும் மாற்றுத் திறனாளிகளுக்கான இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட மின்சார ஸ்கூட்டர் விலையேற்றத்தின் காரணமாக ஒரு இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட ஒரு மின்சார ஸ்கூட்டர் ஒன்றின் தோராய விலை ரூ.26,000/- என தெரியவருகிறது என்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான மின்சார ஸ்கூட்டர் ஒப்பந்தப் புள்ளி மூலம் அதிக அளவில் கொள்முதல் செய்யும் போது விற்பனைக் கூட விலையில் 80 மதிப்பில் கொள்முதல் செய்திட இயலும் என கருதுவதால் இத்திட்டத்திற்கென ரூ. 50,00,000/-மும் மற்றும் வருமான வரம்பை முற்றிலும் நீக்கியதன் மூலம் 2010-2011 ஆம் நிதியாண்டிற்கு கூடுதல் ஒதுக்கீடாக ரூ.52,50,000/–மும் ஆக மொத்தம் ரூ.102.50 இலட்சம் 2010–11 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும்,

மேலும் இத்திட்டத்திற்கு கூடுதல் நிதி ஒதுக்கீடாக ரூ.53,50,000/- வழங்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார். எனவே ஆக மொத்தம் 600 இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட மின்சார ஸ்கூட்டர்களை ஒப்பந்தப்புள்ளி மூலம் கொள்முதல் செய்திடரூ.156.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்திடமாறும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவை ஆய்வு செய்த அரசு 2010–2011ஆம் நிதியாண்டில் இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட மின்சார ஸ்கூட்டர்கள் வழங்க கோரி விண்ணப்பித்த மாற்றுத் திறன் படைத்த கல்வி பயிலும் 385 மாணவ, மாணவியர்களுக்கும் முன்னுரிமை அடிப்படையில் இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட மின்சார ஸ்கூட்டர்கள் வழங்கப்பட வேண்டும் என்றும் இச்செலவினத்திற்காக ரூ.1,00,10,000/– (ரூபாய் ஒரு கோடியே பத்தாயிரம் மட்டும்) ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்திற்கு 2010–2011ஆம் நிதியாண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.50,00,000/– மற்றும் பார்வை மூன்றில் காணும் அரசாணையில் வருமான உச்சவரம்பை நீக்கியதன் மூலம் இத்திட்டத்திற்கான கூடுதல் நிதி ஒதுக்கீடான ரூ.52,50,000/–லிருந்து இச்செலவினம் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

5.மேலே பத்தி 4ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2235–சமூக பாதுகாப்பும் நலனும் 02 சமூக நலன் 101 – மாற்றுத் திறனாளிகள் நலன் பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்–II– மாநிலத் திட்டம் – JH மாற்றுத் திறனாளிகளுக்கான மறுவாழ்வுத் திட்டம் –19 இயந்திரமும் சாதனமும் 01 வாங்குதல்".
(து.தொ.கு 2235–02–101–JH-1914)

7. இவ்வாணை நிதித்துறையின் அ.சா. எண். நிதி(சந)/46029/2010, நாள்3.9.2010ன் ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பா. இராம மோகன ராவ்,
அரசு முதன்மைச் செயலாளர்(பொ).

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–6.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் /அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–5/9/35.
தலைமைக் கணக்காயர், சென்னை–18/35
தலைமைக் கணக்காயர், சென்னை– 18/35 (பெயரில்)

<u>நகல்:-</u>
நிதி (சந) துறை, சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர் (திரு. எஸ்.கே.பி) சென்னை–9.
செயலாளர் (மா.திந. துறை) அவர்களின் தனிச் செயலாளர்,சென்னை–9.
மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, அனைத்துப் பிரிவுகள்.
இருப்பு கோப்பு/உதிரி

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.